JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-1  Witness
for Prosecution

| DVC.No. | 03/2024 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **PW1–மகேஷ் (எ) உமா மகேஷ்வரி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2026 | | | |

**1ம் எதிர்மனுதாரர் ஆஜர். 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் ஆஜர் இல்லை.**

**1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவர் என்னிடமிருந்து விவாகரத்து கோரி பவானி சார்பு நீதிமன்றத்தில் HMOP.221/2023 தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் எனக் கோரி HMOP.106/2024 என்கிற வழக்கை பவானி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன் என்றால், சரிதான். நான் சேர்ந்து வாழக்கோரி தாக்கல் செய்த மனுவிற்கு பின்னிட்டு தான் எனது கணவர் மீது ஜீவனாம்சம் வழக்கு மற்றும் வன்கொடுமையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்திருக்கேன் என்றால், சரிதான்.

நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் எனது கணவராலோ, அல்லது எனது கணவரின் பெற்றோரோ என்னை தொந்தரவு செய்தார்கள் என்பது குறித்து எந்த காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை என்றால், சரிதான். எனது கணவர் எனக்கு குழந்தை குறைமாத குழந்தை பிறந்து இறந்ததால் அவர் என்னை விட்டு சென்றுவிட்டார், அதனால் அது குறித்து நான் புகார் அளித்திருந்தேன்.

நான் பவானி மகளிர் காவல் நிலையத்தில் எனது பொருட்கள் வேண்டும் என்றுதான் எனது கணவர் மீது புகார் கொடுத்திருந்தேன் என்றால், சரிதான். அந்த சமயத்தில் நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. நான் அப்போதே கேட்டு பார்த்தேன், எனது கணவர் முடியாது என்று கூறிவிட்டார், நான் பவானி மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரின் விசாரணையில் நான் எனது கணவர் என்னை அழைக்கிறார், ஆனால் எனக்கு உடம்பு சரியில்லை 3 மாதங்கள் கழித்து வருகிறேன் என்று தான்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.10 07:20:03 +0530

விசாரணையில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். ஆனால் எனது கணவர் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்வதாக கூறினார்.

நானும், எனது கணவரும் ஒன்றாக இருந்தபோது தொலைபேசியிலும், வாட்ஸ் அப்பிலும் அதிகம் பேசி வருவோம் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த இந்த வழக்கில் எனது கணவர் என்ன பதிலுரை கொடுத்துள்ளார் என்கிற விவரத்தை நான் படித்து தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். எனது கணவர் இந்த வழக்கில் பதிலுரையில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்கிற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால், சரியல்ல. தெரிந்து கொள்ளவில்லை.

எனக்கு இரண்டு முறை கரு கலைப்பு ஏற்பட்டுள்ளது என்றால், சரிதான். அப்போதும் எனக்கு குழந்தை பெற்றெடுக்க ஆசை தான் என்றால், சரியல்ல. எனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் என்னை குழந்தை வேண்டும் என கட்டாயப்படுத்தினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் வாட்ஸ் அப் Status நான் செய்தது தான் என்றால். சரிதான். அடுத்த குழந்தை குறித்து நான் எனது அக்காவிடம் கேட்டு சொல்வதாக தான் வாட்ஸ் அப்பில் எனது கணவருடன் பேசினேன் என்றால். சரிதான். எனக்கு உடல் ரீதியாக பிரச்சனை இருப்பதாலும், எனது அக்கா செவிலியராக பணிபுரிந்து வருவதால் அவரிடம் கேட்டேன். எனது மூன்றாவது குழந்தை இறப்பிற்கான காரணம் SEPSIS என்று குறிப்பிட்டு தான் மருத்துவமனையில் இறப்பு அறிக்கை கொடுத்தார்கள் என்றால், சரிதான்.

எனக்கு எனது வீட்டில் சீதனமாக கொடுத்த பொருட்கள் அனைத்தையும் எனது சொந்தக்காரர்கள் எனது கணவர் வீட்டில் சென்று எடுத்து விட்டார்கள் என்றால், சரிதான். நான் கர்ப்பமாக இருக்கும்போது எனது கணவர் என்னை காரில் தான் மருத்துவமனைக்கு அழைத்து செல்வார் என்றால், சரிதான். 3 முறை மட்டும் தான் அழைத்து சென்றிருக்கிறார். அதற்கு முன்பு எனது அத்தை தான் என்னை பார்த்து வந்தார்.

திருமணத்தின்போது எனக்கு எனது கணவர் குடும்பத்தார் சார்பில் 5 பவுன் தாலிக்கொடி போடப்பட்டது என்றால். சரிதான். மீண்டும் ஒருமுறை நகை வாங்கும்போது எனது கணவர் அந்த நகைக்கு ரூ.60,000/- கொடுத்தார் என்றால். சரிதான். மேற்படி தாலிக்கொடி மற்றும் ரூ.60,000/- கொடுத்து வாங்கிய நகை இன்னும் என்னிடம் தான் உள்ளது என்றால், சரிதான். எனது கணவருக்கும் அவரது குடும்பத்தார்களுக்கும் எவ்வித அசையா சொத்தும் இல்லை என்றால், சரியல்ல. எனது கணவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் அசைய சொத்து உள்ளது என்பது குறித்து எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும் எனது கணவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் அசையா சொத்து என்று எதுவும் இல்லை என்றால், சரியல்ல.

எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால், கணினி பழுது பார்க்கும் வேலை கம்பெனிக்கு செய்து வருகிறார். நான் எனது பிரமாண

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.10 07:20:37 +0530

வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ளபடி எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.10 07:20:46 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.